அனுப்புநர்
M. ராஜேந்திரன், பி.இ.,
உதவி இயக்குநர் / நகர் ஊரமைப்பு
மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
24, ஜி.எஸ்.டி ரோடு, செங்கல்பட்டு-1
dcglregion@gmail.com

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
வெண்பேடு ஊராட்சி,
திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
திருப்போரூர் வட்டம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

ந.க.எண்.2070/2015/செம3 நாள். 4 .11.2015

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு – நகர் ஊரமைப்புதுணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் (ம) ஊராட்சி ஒன்றியம், வெண்பேடு ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.367/9A, 9B, 9C, 9D, 9E, 9F, 9G, 10A, 10B, 10C, 10D, 10E, 10F, 10G, 10H, 10i, 10J, 10K, 10L, 10M, 10N, 10O, 10P, 10Q, 11A, 11B, 11D; 368/20A2B; 369/8, 9, 10, 11B, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23A, 23B பரப்பு **9.88** ஏக்கர் (as per Revenue) இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் - தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - சம்பந்தமாக.

பார்வை
1. மனுதாரர் திரு.B.தனசேகரன் அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள்.27.07.2015
2. ஊராட்சி மன்றத் தலைவர், வெண்பேடு ஊராட்சி அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.12.06.2015
3. வட்டாட்சியர், திருப்போரூர் வட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4441/2015/அ1, நாள்.03.06.2015
4. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.24.06.2015 (உத்தேச சாலைகள் (ம) பூங்கா ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய கோரியது)
5. மனுதாரர் திரு.B.தனசேகரன் அவர்களின் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள். 19.09.2015 (தானப்பத்திர நகல் மற்றும் ஊராட்சி மன்றத் தீர்மானம் பெறப்பட்டது)
6. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அவர்களின் கடிதம் இதே எண் நாள்.19.10.2015 (துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம் (ம) நன்னிலைவரி கட்டணம் செலுத்தக் கோரியது)
7. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.14619/ 1988/பிசி, நாள்.27.04.1988
8. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.40483/ 2000/எல்ஏ1, நாள்.07.11.2002
9. நகர் ஊரமைப்பு சிறப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.16985/ 2000/எல்ஏ2, நாள்.29.09.2007
10. அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை நாள்.16.06.2003
11. மனுதாரர் திரு.B.தனசேகரன் அவர்களின் கடிதம் (ம) இணைப்புகள் நாள் 19.10.2015 & 02.11.2015 (நன்னிலைவரி கட்டணம் (ம) துணைக்கோள் நகர வளர்ச்சிக் கட்டணம் செலுத்திய விவரம்)
12. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண். 12544/2014/சிபி, நாள்.04.07.2014

******

1. காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் (ம) ஊராட்சி ஒன்றியம், வெண்பேடு ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்கள்.**367**/9A, 9B, 9C, 9D, 9E, 9F, 9G, 10A, 10B, 10C, 10D, 10E, 10F, 10G, 10H, 10i, 10J, 10K, 10L, 10M, 10N, 10O, 10P, 10Q, 11A, 11B, 11D; **368**/20A2B; **369**/8, 9, 10, 11B, 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21, 22, 23A, 23B பரப்பு **9.88** ஏக்கர் (as per Revenue) இடத்தில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதலுக்கு பார்வை ஒன்று மற்றும் இரண்டில் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்ட உத்தரவு வழங்கப்படுகிறது.
2. இம்மனைப்பிரிவிற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **மவ/நஊதுஇ(செம)எண்.135/2015** என எண்ணிடப்பட்டு இரண்டு தொகுப்புகள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.
3. மேலும் பார்வை 7, 8 மற்றும் 9-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் கடிதங்களில் தெரிவித்துள்ளபடி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.
4. பார்வை 11-ல் சுட்டியுள்ள அரசாணையின்படி சாலைகளை மனுதாரரிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றும், சாலைகள், குடிநீர், தெரு விளக்குகள் மற்றும் வடிகால் வசதிகளை செய்து மனைப்பிரிவு முழுமையாக அபிவிருத்தி செய்து அதனை உள்ளாட்சிக்கு ஒப்படைத்த பின்னரும், மேலும் மேற்கண்ட அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மன்றத்தின் அனுமதி பெற்றும், இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19(இ),19(உ) குறித்து உறுதி செய்த பின்னரே ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
5. மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனைஎண்.19(ஈ)-ன்படி இவ்வுத்தரவின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. The Land Ownership is the responsibility of the local Authority, as per the G.O.Ms No.71 RDLA dated 16.06.2003 and this technical approval for the layout is accorded based on the land ownership certificate furnished by the executive authority.
7. பார்வை 10-ல் கண்ட கடிதம் மூலம் பெறப்பட்ட இணைப்புகளில் உள்ளவாறு ஊராட்சி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனைப்பிரிவு சாலைகள் இடத்தினை தனி புலஉட்பிரிவு பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
8. EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகள் ஆகும். இம்மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றி அமைக்கவோ கூடாது.
9. உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள் உள்ளாட்சியால் தெரிவிக்கப்படும் சாலையின் அகலம், அதன் உயரம் மற்றும் தரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய பொறியாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களால் ஆய்வு செய்து சாலையின் நிலை குறித்த தகுதிச் சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனை</u>

பார்வை 12-ல் சுட்டிய நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை நக.எண்.12544/2014/சிபி, நாள்.04.07.2014 சிறப்பு நிபந்தனையில் "நகர் ஊரமைப்புத் துறை சட்டப் பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4.11.15

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்(பொ),
செங்கல்பட்டு.

<u>இணைப்பு:</u>
மனைப்பரிவு வரைபடம் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் (2 நகல்கள்)

4/11/15

<u>நகல்:</u>

1. திரு.B.தனசேகரன்
   6/35, பொன்னியம்மன் கோயில் தெரு,
   சோழிங்கநல்லூர், சென்னை -

2. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-2
   அவர்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் மற்றும்
   மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3. நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர், செங்கல்பட்டு
   மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.